1967 ஜூலை 14]

இராமநாதபுரம், திருச்சி, சேலம், தருமபுரி ஆகிய இடங்களிலும் படிப்படியாக ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

குடியாத்தம் வட்டத்தில் கசிவு நீர் ஏரிகள்

*** 341 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூக்காவில் Percolation tanks திட்டம் நடைபெறுகிறதா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கே, அவற்றின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) ஆம்.

(இ) 1966–67, 1967–68-ம் ஆண்டுகளில் குடியாத்தம் தாலூகாக்களிலுள்ள கீழ்க்கண்ட கிராமங்களில் கசிவுநீர் ஏரிகளை தோண்டவும் புதுப்பிக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது—

(1) செங்குன்றம்.

(2) கொண்ட சமுத்திரம்.

(3) சேத்துபண்டை.

(4) மூட்டாளம்.

செங்குன்றத்தில் (நெத்தான குட்டை) வேலை நடந்து வருகிறது. எஞ்சிய கிராமங்களிலும், ஏரிகளைத் தோண்டுவதற்கும் புதுப்பிப்பதற்கும், உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : மலைப் பிரதேசங்களில் பெரு மழை பெய்து, வெள்ளம் ஏற்பட்டு, காட்டாறுகளாக ஓடும்போது, அங்குள்ள நிலத்தின் மண்வளம் நாசமாவதோடு, விவசாயம் செய்திருந்தால் அதுவும் நாசமாகி, விவசாய அபிவிருத்தி பாதிக்கப்பட்டு, உணவு உற்பத்தி தடைபடுகிறது. குடியாத்தம் ஒரு பக்கத்தில் ஆந்திரத்தையும், இன்னொரு பக்கத்தில் மைசூரையும் எல்லைகளாகக் கொண்டுள்ள மலைப் பிரதேசம் நிறைந்த பகுதியாகும். ஆகவே, இதற்கு விசேஷ கவனம் செலுத்தி, இதுபோன்ற பெர்கொலேஷன் டாங்குகளை அதிகப்படியாக ஏற்பாடு செய்வதற்கு உடனடியாக உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டதுபோல, அதற்கு வேண்டிய திட்டங்களை அரசு தீட்டி வருகிறது. அதற்காகத்தான் இப்பொழுது அந்த மண்ணையும் வண்டலையும் அடித்துக் கொண்டு போகாமலிருக்க, ஆங்காங்கு ஓடைக்கு எதிர்ப்புறங்களில் காட்டை அமைத்து அதன் மூலம் மண் அரிப்பதைத் தடுத்துக்கொண்டு வருகிறோம். மேலும் மத்திய அரசாங்கம் இதற்காக 15 சத வீதம் மானியமாகவும் 60 சதவீதம் கடனாகவும் அளிக்கிறார்கள். எஞ்சிய தொகையை மாநில அரசாங்கம் செலவு செய்து தேவையான இடங்களில் பெர்கொலேஷன் டாங்குகளை அமைக்கும்.

அரிசன நலப் பள்ளி ஆசியர்களுக்கு வீடுகள்

*** 342 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய அரிஜன நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967–68-ல் தென் ஆர்க்காடு ஜில்லாவில் ஹரிஜன நல இலாக்காவின் கீழுள்ள ஹரிஜனநல பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் ஆசிரியைகள் ஆகியவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?